# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்இகோத்தகிரி

**O.S,No. 57/2024**

**2026 –ம் வருடம் செப்டம்பர் திங்கள் 11ம் நாள் வெள்ளிக்கிழமை வாதி தரப்பு சாட்சி PW2 ஆக நிலை 3 பெஞ்ச் கிளர்க் திருமதி. M. கிருத்திகா என்பவரால் சத்தியபிரமாணம் செய்து விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.**

**பெயர் : விஜயா** **தாலுக்கா : கோத்தகிரி**

**த/பெ : பெள்ளன்** **வயது : 58**

**கிராமம் : புதுகோத்தகிரி** **தொழில் : தோட்ட வேலை**

---

**வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.**

**PW2 முதல் விசாரணை 11.04 AM.**

1. நான் புதுக்கோத்தகிரியை சேர்ந்தவர். வாதி லக்ஷ்மணனை எனக்கு தெரியும். பிரதிவாதிகளையும் எனக்கு தெரியும். நானும் வாதி மற்றும் பிரதிவாதிகள் அனைவரும் ஒரே கிராமத்தை சேர்ந்தவர்கள். எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததின்பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். வாதி, பிரதிவாதிகளுக்கிடையே உள்ள பிரச்சனை எனக்கும் ஊரில் உள்ளவர்களுக்கும் தெரியும். இந்த வழக்கு சொத்து 8 சென்ட் ஆகும். வழக்கு சொத்து தவிட்டுமேடு, கைத்தளா, கோத்தகிரியிலிருந்து மேட்டுப்பாளையம் செல்லும் மெயின் ரோட்டின் அருகில் உள்ளது. வழக்கு சொத்தின் சர்வே எண். 1662/2 ஆகும். இந்த விபரங்கள் அனைத்தும்

வழக்கு சொத்தின் அருகில் எனக்கு தோட்டம் உள்ளதால் தெரியவந்தது. வழக்கு சொத்தின் நான்கு எல்லைகள் எனக்கு தெரியும். வழக்கு சொத்தின் உரிமையாளர் வாதி லக்ஷ்மணன் ஆவார். வழக்கு சொத்தின் அனுபோகத்தில் தற்போது லக்ஷ்மணன் இருந்து வருகிறார். வழக்கு சொத்து, வாதியின் அப்பாவின் அம்மாவான மாதியம்மாளுக்கு சொந்தமான சொத்து ஆகும். மாதியம்மாள் இறந்துவிட்டார் என்பதால் அவரது வாரிசுகளான ராஜு, கிருஷ்ணன் ஆகியோர்களுக்கு கிடைக்கப்பெற்றது.

2. குடும்பத்தில் பாகப் பிரிவினை ஏற்பட்டதில் மொத்த 50 சென்டில் வாதிக்கு 8 சென்ட் தாவா சொத்து ஒதுக்கப்பட்டது. அந்த 8 சென்ட்டில் வாதி தகர செட் போட்டுள்ளார். அதை பிரதிவாதிகள் அப்புறப்படுத்திவிட்டார்கள். மாதியம்மாளுக்கு சொத்து, மாதியம்மாளின் அப்பா பெயர் கனவன் ஆகும். கனவனின் வாரிசுகள் கிருஷ்ணன், மாதியம்மாள் ஆவார். வழக்கு சொத்தை கிருஷ்ணன், பூசாரி கவுந்தன் என்பவரிடமிருந்து 1934ல் கிரையமாக வாங்கியிந்தார். அந்த வகையில் வாதிக்கு வாரிசு அடிப்படையில் இந்த வழக்கு சொத்து பாத்தியப்பட்டது. இந்த வழக்கு விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும்.

**Taken down by/before me in open court read over/ interpreted to the witness in the presence of the defendant/ defendant's pleader and admitted by the witness to be correct.**

**Sd/- G. Amirdham, 11.09.2026**
**District Munsif,**
**Kotagiri.**